ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 2307/16 - 2022 නොවැම්බර් මස 23 වැනි බදාදා - 2022.11.23
*2307/16 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 23 ஆந் திகதி புதன்கிழமை*
*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

## உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள்

**(262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 66அ(1) (அ) என்னும் பிரிவின் கீழ் கெஸ்பேவ நகர சபையின் உறுப்பினர் ஒருவரின் பதவியிலான வெற்றிடத்தை நிரப்புதல்**

கெஸ்பேவ நகர சபையின் உறுப்பினர் ஒருவரின் பதவி, இறப்பெய்தியமை காரணமாக வெற்றிடமாயிருக்கின்றதாதலாலும் ;

மேற்குறித்த கட்டளைச் சட்டத்தின் 66அ(1) (அ) ஆம் பிரிவின் கீழ், கெஸ்பேவ நகர சபையின் 05 ஆம் இலக்க போகுந்தர வட்டாரத்திற்கு தெரிவுசெய்யப்பட்ட போரகே தொன் கமல் ரஞ்ஜன என்பவர் அங்கம் வகிக்கின்ற ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன என்ற அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் செயலாளர் முப்பது (30) நாட் காலக்கெடுவுக்குள் உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் (262 ஆம் அத்தியாயம்) 9 ஆம் பிரிவின் கீழ் தகைமையற்றவரல்லாத வேட்பாளரொருவராக, உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவரென வெளிப்படுத்தப்பட வேண்டியவரும், அக்கட்சியைச் சேர்ந்தவருமான கெஸ்பேவ நகர சபையின் 05 ஆம் இலக்க போகுந்தர வட்டாரத்தின் உறுப்பினர் தொடர்பாக தீர்மானிக்குமாறு என்னால் பணிக்கப்பட்டுள்ளாராதலாலும் ;

மேலே கூறப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் செயலாளரினால் அவ்வெற்றிடத்தை நிரப்புவதற்காக யாபா முதியான்சேலாகே ஜயரத்ன என்பவரைப் பெயர் குறித்து நியமிக்கும் தமது முடிவினை அறிவித்துள்ளாராதலாலும் ;

இப்போது கெஸ்பேவ நகர சபையின் தெரிவத்தாட்சி அலுவலரான மாபா முதியன்சேலாகே சேன குமாரசிறி பண்டார மாபா ஆகிய நான், உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் (262 ஆம் அத்தியாயமான) 66அ(1) (அ) என்னும் பிரிவின் நியதிகளின்படி செயற்பட்டு யாபா முதியான்சேலாகே ஜயரத்ன என்பவர் கெஸ்பேவ நகர சபையின் 05 ஆம் இலக்க போகுந்தர வட்டாரத்தின் உறுப்பினர் ஒருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

**எம். எம். எஸ். கே. பண்டார மாபா,**
தெரிவத்தாட்சி அலுவலர்,
கெஸ்பேவ நகர சபை.

மாவட்டத் தேர்தல்கள் அலுவலகம்,
கொழும்பு,
2022, நவெம்பர் 23.

EOG 11-252/1

**(262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 66அ(1) (அ) ஆம் பிரிவின் கீழ் அநுராதபுரம் மாநகர சபை உறுப்பினர் ஒருவரின் பதவியிலான வெற்றிடத்தை நிரப்புதல்**

*அநுராதபுரம் மாநகர சபையின் உறுப்பினர் ஒருவரின் பதவி, அனுமதி பெறாது தொடர்ச்சியாக மூன்று சபைக் கூட்டங்களுக்கு சமுகமளிக்காமை காரணமாக வெற்றிடமாயிருக்கின்றதாதலாலும் ;*

*மேற்குறித்த கட்டளைச் சட்டத்தின் 66அ (1) (அ) ஆம் பிரிவின் கீழ், அநுராதபுரம் மாநகர சபையின் இலக்கம் 01-பேதிஸ்புர வட்டாரத்திற்கு தெரிவு செய்யப்பட்ட மஹும்ப தெல்கொட கங்கானமலாகே விநோதனீ விஜேசூரிய என்பவர் அங்கம் வகிக்கின்ற ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன என்ற அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் செயலாளர் முப்பது (30) நாட் காலக்கெடுவுக்குள் உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் (262 ஆம் அத்தியாயம்) 9 ஆம் பிரிவின் கீழ் தகைமையுடைய வேட்பாளரொருவராக, உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவரென வெளிப்படுத்தப்பட வேண்டியவரும் அக்கட்சியைச் சேர்ந்தவருமான அநுராதபுரம் மாநகர சபையின் இலக்கம் 01-பேதிஸ்புர வட்டாரத்தின் உறுப்பினர் தொடர்பாகத் தீர்மானிக்குமாறு என்னால் பணிக்கப்பட்டுள்ளாராதலாலும் ;*

*மேலே கூறப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் செயலாளரினால் அவ்வெற்றிடத்தை நிரப்புவதற்காக ஜயசிறி முதியன்சேலாகே மனிஷா ரோஷினி பண்டார என்பவரைப் பெயர் குறித்து நியமிக்கும் தமது முடிவினை அறிவித்துள்ளாராதலாலும் ;*

*இப்போது, அநுராதபுரம் மாநகர சபையின் தெரிவத்தாட்சி அலுவலரான கெங்காதரன் முகுந்தன் ஆகிய நான், உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் (262 ஆம் அத்தியாயம்) 66அ(1) (அ) ஆம் பிரிவின் நியதிகளின்படி செயற்பட்டு ஜயசிறி முதியன்சேலாகே மனிஷா ரோஷினி பண்டார என்பவர் அநுராதபுரம் மாநகர சபையின் இலக்கம் 01-பேதிஸ்புர வட்டாரத்தின் உறுப்பினர் ஒருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.*

**கெ. முகுந்தன்,**
*தெரிவத்தாட்சி அலுவலர்,*
*அநுராதபுரம் மாநகர சபை.*

*மாவட்டத் தேர்தல்கள் அலுவலகம்,*
*அநுராதபுரம்,*
*2022, நவெம்பர் 23.*

EOG *11-252/2*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*